**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருவாடானை.**

**முன்னிலை: திருமதி.S.ரேவதி., பி.ஏ., பி.எல்.,**
**மாவட்ட உரிமையியல் நீதிபதி,**
**திருவாடானை.**

**2026-ஆம் ஆண்டு ஜுலை திங்கள் 24-ஆம் நாள் வெள்ளிக்கிழமை**

**I.A. No.74 of 2015**
**in**
**O.S. No.23 of 2015**

1. ராமசாமி
2. வேலு (மரணம்)
3. கணேசன்
(ஷையார்கள் தங்களுக்காகவும்,
திருவாடானை தாலுகா அறிவித்தி
கிராம மக்களின் பொதுப்பிரதிநிதிகள் ஹோதாவிலும்)

... மனுதாரர்கள்/வாதிகள்

**/எதிர்/**

1. அனுமந்ததாசரி (மரணம்) ...எதிர்மனுதாரர்கள்/
2. பழனிச்சாமி 1, 2 பிரதிவாதிகள்

இந்த மனுவானது இந்நீதிமன்றம் முன்பு 18.06.2026ம் தேதி இறுதி விசாரணைக்கு வந்த போது மனுதாரர்கள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.N.பாலாஜி அவர்கள் ஆஜராகியும், 2ம் எதிர்மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.K.தனபால் அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாதங்களை கேட்டும், வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்தும், இது நாள் வரையில் இந்நீதிமன்ற பரிசீலனையின் கீழ் இருந்து வந்த இம்மனுவில் இந்நீதிமன்றம் வழங்கும்....

**உத்தரவு**

மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் மனுதாரர்களை அறிவித்தி கிராம மக்களின் பொதுப்பிரதிநிதியாக ஏற்றுக்கொண்டு வழக்கை மேல்நடத்த அனுமதியளித்து

REVATHI SUBBIAH
Digitally signed by REVATHI SUBBIAH
18:04:29 +0530

உத்தரவிடக்கோரி கட்டளை 1 விதி 8 மற்றும் பிரிவு 151 சி.பி.சி.-ன் கீழ் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**1. மனுவின் சுருக்கம்:-**

**1.1.** மனுதாரர் அசல் வழக்கில் 1ம் வாதி ஆவார். 2ம் மனுதாரர்/வாதிக்காகவும் திருவாடானை தாலுகா அறிவித்தி கிராம மக்களின் பொதுப்பிரதிநிதிகள் என்ற முறையில் வழக்கை தாக்கல் செய்துள்ளார். திருவாடானை தாலுகா, கூகுடி குரூப், அறிவித்தி கிராமத்தில் சுமார் 100 குடும்பங்கள் உள்ளன. மேற்படி குடும்பங்களில் ஓட்டுப்போடும் தகுதியுடைய மக்கள் சுமார் 150 நபர்கள் உள்ளனர். மேற்படி அனைவரையும் வாதிகளாக சேர்த்து வழக்கிட இயலாத சூழ்நிலையில் அறிவித்தி கிராம மக்களின் பொதுப்பிரதிநிதியாக மனுதாரர்களை ஏற்றுக்கொண்டு உத்தரவிடக்கோரி மனுதாக்கல் செய்யப்பட்டுள்ளது. எனவே, இம்மனுவை அனுமதிக்க வேண்டும்.

**2. எதிருரையின் சுருக்கம்:**

**2.1.** தாவா சொத்துக்கள் ஆதியில் அரசு சொத்தாக இருந்து 1ம் பிரதிவாதி முன்னோர்கள் கூரை வீடு கட்டி வாழ்ந்து வந்தனர். கூரை வீடு தீப்பற்றி எரிந்து போனதால் 1ம் பிரதிவாதி ஓட்டு வீடு கட்டி வீட்டு வரி செலுத்தியும், மின் கட்டணம் செலுத்தியும் 40 ஆண்டுகளாக ஊர் பொது மக்களுக்கும் வாதிகளுக்கும் நன்கு தெரிந்தே அனுபவம் செய்து வந்தார். இந்நிலையில் 1ம் பிரதிவாதி இறந்து விட்டார். அதனை தொடர்ந்து மேற்படி வீட்டில் அவரது வாரிசான 2ம் பிரதிவாதி தொடர் அனுபவம் செய்து வருகிறார். தாவா சொத்துக்கள் 2ம் பிரதிவாதி முன்னோர்கள் தொட்டு கடந்த 60 ஆண்டுகளுக்கு மேல் தாவா சொத்துக்களில் அனுபவம் செய்து வருகிறார்கள் என்பது 3, 4 பிரதிவாதிகளுக்கும் வாதிகளுக்கும் நன்கு தெரியும். வாதிகள் சொல்லும் தாவா இடம் மாரியம்மன்கோவில் திருவிழாவுக்கு பயன்படுத்தப்படும் பொது இடமில்லை. 1 மற்றும் 2 பிரதிவாதிகள் சட்ட காலத்திற்குமேல் அரசுக்கும், ஊர் மக்களுக்கும் தெரிந்து அனுபவம் செய்து வருகின்றனர். 1, 2 பிரதிவாதிகளுக்கு தாவா சொத்தைப் பொறுத்து நீடனுபவ பாத்திய அனுபவம் சித்தித்துள்ளது. தாவா சொத்துக்களில்

REVATHI SUBBIAH Digitally signed by REVATHI SUBBIAH Date: 2026.07.24 18:04:35 +0530

வாதிகளுக்கு எவ்வித அனுபவமும் இல்லை. தாவா சொத்துக்கள் 1, 2 பிரதிவாதிகளுக்கு தனித்த பாத்திய அனுபவ சொத்தாகும். தாவா சொத்துக்கள் பொது சொத்துக்கள் இல்லாதபோது பிரதிநிதித்துவத்தின்படி இம்மனு தாக்கல் செய்ய வாதிகளுக்கு எந்த உரிமையும் இல்லை. அறிவித்தி கிராமத்தில் 100க்கும் மேற்பட்ட குடும்பங்கள் உள்ளனர். தாவாச் சொத்துக்கள் பிரதிவாதிகளுக்கு பாத்தியப்பட்டது என்பது மேற்படி கிராம பொது மக்களுக்கும் தெரியும். அறிவித்தி கிராம பொதுமக்கள் சார்பாக பிரதிநிதித்துவ முறையில் வாதிகளான 2 நபர்கள் மட்டும் இந்த மனுதாக்கல் செய்ய மனுதாரர்களுக்கு உரிமை இல்லை. வாதிகள் ஊர் பிரதிநிதி என்று கூறுதற்கு எந்த தகுதியும் இல்லை. எனவே இம்மனுவை தள்ளுபடி செய்ய வேண்டும்.

**3.** இம்மனுவில் மனுதாரர்கள் மற்றும் எதிர்மனுதாரர்கள் தரப்பில் எவ்வித சாட்சியமும் விசாரிக்கப்படவில்லை. சான்றாவணங்கள் குறியீடு செய்யப்படவில்லை.

**4.** இம்மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய சங்கதி யாதெனில் இம்மனு அனுமதிக்கத்தக்கதா? இல்லையா?

**5.** இருதரப்பு வாதங்களும் கேட்கப்பட்டது, ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டன, இம்மனு அனுமதிக்கத்தக்கதா? என பரிசீலனை செய்கையில், மனுதாரர் தரப்பு வாதத்தின்போது, இவ்வழக்கு திருவாடானை தாலுகா, அறிவித்தி கிராம மக்களின் சார்பாக தாக்கல் செய்யப்பட்டுள்ளது, இந்த வாதிகளை திருவாடானை தாலுகா, அறிவித்தி கிராம மக்களின் பொதுப்பிரதிநிதியாக வழக்கு நடத்த அனுமதிக்க வேண்டி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது, எனவே இம்மனுவினை அனுமதிக்க வேண்டும் என வாதம் முன்வைக்கப்பட்டுள்ளது. போதுமான வாய்ப்பளித்தபோதும் எதிர்மனுதாரர் தரப்பில் எவ்வித வாதமும் முன்வைக்கப்படவில்லை.

**6.** அசல் வழக்கில் தாவா சொத்து நத்தம் புறம்போக்கு எனவும், அதில் அசைன்மெண்ட் பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளதாகவும், ஒரு குடும்பத்தில் ஒரு நபருக்கு மட்டுமே அசைன்மெண்ட் பட்டா வழங்க முடியும் என்ற நிலையில், 1ம் பிரதிவாதி தவறான தகவல் அளித்து அசைன்மெண்ட் பட்டா பெற்றுள்ளார் எனவும், தாவா இடத்தில் ஊர் பொது மக்கள் பலபேர் அனுபவத்தில் உள்ளனர் எனவும்

REVATHI SUBBIAH Digitally signed by REVATHI SUBBIAH Date: 2026.07.24 18:04:15 +0530

தெரிவித்து, தாவா சொத்தில் வாதியின் அனுபவத்தை பிரதிவாதிகள் இடையூறு செய்யக்கூடாது என நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரமும், 1, 2 பிரதிவாதிகளின் பெயருக்கு வழங்கப்பட்ட பட்டாவை ரத்து செய்ய வேண்டும் என செயலுறுத்துக்கட்டளை பரிகாரமும் கோரி அசல் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**7.** இந்நிலையில், தாவா சொத்தில் அனுபத்தில் உள்ள நபர்களை பொறுத்து மட்டுமே இவ்வழக்கு சங்கதி அமைந்துள்ளது என்பதை அறிய முடிகிறது. ஆனால் தாவா சொத்தில் ஊர் பொதுமக்கள் பலபேர் அனுபவத்தில் இருப்பதாக மட்டும் மனுதாரர் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. யார், யார் அனுபவத்தில் உள்ளார்கள் என்பதை தெரிவிக்கவில்லை. மேலும் இவ்வழக்கு பரிகாரமும் வாதிகளுக்கான தனிப்பட்ட பரிகாரமாகவே கேட்கப்பட்டுள்ளது. ஊர் பொது மக்களின் நலனுக்கான எந்த பரிகாரமும் கோரப்படவில்லை. இவ்வழக்கு பரிகாரம் தாவா சொத்தில் அனுபவத்தில் உள்ள நபர்களை மட்டுமே கட்டுப்படுத்துமே தவிர ஊர் பொதுமக்களை கட்டுப்படுத்தாது. மேலும் வாதிகள் ஊர் பொது மக்களின் சார்பாக இவ்வழக்கினை நடத்த எந்த வகையில் தகுதியான நபர்கள் என்பதை மனுவில் தெரிவிக்கவில்லை. இந்நிலையில் மனுதாரர்கள்/வாதிகளை திருவாடானை தாலுகா, அறிவித்தி கிராம மக்களின் பிரதிநிதிகளாக வழக்கை நடத்த அனுமதிக்கக் கோரியுள்ளது ஏற்கக்கூடியது அல்ல. எனவே மனுதாரர்கள்/வாதிகளை திருவாடானை தாலுகா, அறிவித்தி கிராம மக்களின் பிரதிநிதிகளாக வழக்கை நடத்த அனுமதிக்க இயலாது என இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது. வாதிகள் தனிப்பட்ட முறையில் அசல் வழக்கினை மேல்நடத்த அறிவுறுத்தப்படுகிறது. அதற்கு ஏற்றவாறு வழக்குரையை திருத்தம் செய்ய மனுதாரர்களுக்கு உத்தரவிடப்படுகிறது.

**8. முடிவாக, இம்மனு செலவுத்தொகையின்றி தள்ளுபடி செய்யப்படுகிறது.**

இந்த உத்தரவு என்னால் நேரடியாக சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் நேரடியாக பிழை

REVATHI SUBBIAH Digitally signed by REVATHI SUBBIAH Date: 2026.07.24 18:04:54 +0530

திருத்தங்கள் செய்யப்பட்ட பின்னர், இன்று 2026 ஆம் ஆண்டு ஜுலை திங்கள் 24-ம் நாள் இத்திறந்த நீதிமன்றத்தில் அவையறிய உத்தரவு பகரப்பட்டது.

REVATHI SUBBIAH Digitally signed by REVATHI SUBBIAH Date: 2026.07.24 18:04:59 +0530

**மாவட்ட உரிமையியல் நீதிபதி,**
**திருவாடானை.**

**மனுதாரர்கள் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள்: இல்லை**

**எதிர்மனுதாரர் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள்: இல்லை**

REVATHI SUBBIAH Digitally signed by REVATHI SUBBIAH Date: 2026.07.24 18:05:03 +0530

**மாவட்ட உரிமையியல் நீதிபதி,**
**திருவாடானை.**

மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,
திருவாடானை

**I.A. No.74 of 2015**

**in**

**O.S. No.23 of 2015**

**சீரான/வரைவு (உத்தரவு)**

நாள்: 24.07.2026.